ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1723/20 - 2011 සැප්තැම්බර් 13 වැනි අඟහරුවාදා - 2011.09.13

*1723/20 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 13 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு

அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (1) (அ) பந்தியினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, என்னால் 2011, மாச்சு மாதம் 17 ஆந் திகதியும் 1697/25 ஆம் இலக்கமும், 2011, மே மாதம் 06 ஆந் திகதியும் 1704/17 ஆம் இலக்கமும் கொண்ட அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தல்கள் மூலம் திருத்தப்பட்ட, 2010, நவெம்பர் மாதம் 22 ஆந் திகதியும் 1681/3 ஆம் இலக்கமும் கொண்ட அறிவித்தல் 2011, மே மாதம் 10 ஆந் திகதியிலிருந்து அமுலுக்குவருமாறு பின்வரும் அட்டவணையிலுள்ளவாறு மேலும் திருத்தப்படுகின்றதென்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
சனாதிபதி.

சனாதிபதி அலுவலகம்,
கொழும்பு 01,
2011, செத்தெம்பர் 12.

**அட்டவணை**

(1) அவ்வறிவித்தலில் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள் அமைச்சர் (இல. 3) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு:-

(அ) அதன் I ஆம் நிரலின் 9 ஆவது விடயத்தை நீக்குவதன் மூலமும் ;

(2) அவ்வறிவித்தலில் பாதுகாப்பு அமைச்சர் (இல. 1) என்ற தலைப்பு தொடர்பில் பின்வருமாறு :-

(அ) அதன் I ஆம் நிரலிலுள்ள 25 முதல் 26 வரையான விடயங்களுக்குப் பதிலாக, பின்வரும் விடயங்களைப் பதிலீடு செய்வதன் மூலமும் :-

"25. கொழும்பு பெரும்பாக நகர போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டத்தின் நகராட்சி, வட்டார அபிவிருத்திப் பகுதி உள்ளிட்ட கொட்டாவை, கடுவலை, கடவத்தை நகராட்சி வட்டார அபிவிருத்திக் கருத்திட்டமும் அதனுடன் தொடர்புபட்ட செயற்பாடுகளும்.

26. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள சகல விடயங்களும்.

27. II ஆம் நிரலில் காட்டப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனங்களை கண்காணித்தலும்"

9- 1258